தளம்
THALAM

தளத்தின்

# விருட்சம்

சீளா - 2024

துளா -09



தளத்தின்
விருட்சம்
கிளை - 2024
தளை - 09

# உள்ளே!!..

முன்னுரை

ஆசிரியர் உரை

1. பெரியார் வாழ்க்கை வரலாறு - மகாராணி எலிசபெத்
2. அன்னப்பறவை
3. திறன் விருத்தி கட்டுரை - மனம், உடல், உணர்வு வெளிப்படுத்தும் ஆளுமை திறன் விருத்தி.
4. மருத்துவ பக்கம் - இருதய பிரச்சனை பற்றி புரிந்து கொள்ளல்.
5. குறுக்கெழுத்து புதிர்
6. கவிதை - நம்மை வளர்த்த கல்வி
7. நவீன கவிதை - நம் கல்வி முறையும் இக்கால வாழ்வியலும்.
8. சிறுகதை - கடந்து செல்லுங்கள்
9. உளவியலில் ஆளுமை
10. எமது கல்வி பாரம்பரியம்.
11. நம் கல்வி முறையும் இக்கால வாழ்வியலும்
12. தமிழர் இலக்கும் நடை போட வேண்டிய பாதையும்.
13. இளைஞர்களின் வாக்குரிமை: ஜனநாயகத்தில் மாற்றத்தை உருவாக்கும் சக்தி.
14. புரட்டாதி மாத திருமலை செய்திகள் - ஓர் பார்வை.
15. பயிரிடல் கோட்பாடு

தளத்தின் தடம்

அடுத்த மாத திட்டங்கள்

அடுத்த மாதங்களுக்கான தலைப்பு

இதழ் ஆசிரியர் குழாம் விபரம்

## முன்னுரை

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தளத்தின் "விருட்சம் கிளை 2024, தளை - 09" இனை இம் முறையும் வெளியிடுவதில் பெரும் உவகை அடைகின்கிறேன்.

முற்றும் முழுதாகவே இளையோரின் கைவண்ணத்தில் பல்துறை சார் சுவாரஸ்யமான அறிவுப்பொதிகள் பலவற்றை தேக்கியபடி, ஒவ்வொரு ஆக்கங்களும் மாறுபட்ட கோணத்தில் பிரசுரிக்கப்படும் விடயங்களையும், இளையோர் எம் எண்ணவோட்டங்களையும் இணைத்து இதழ் வெளியிடப்பட்டுள்ளது.

பெரியார் வரலாறு முதல், கவிதை, கட்டுரை, தேடலை அதிகரிக்கும் குறுக்கெழுத்து புதிர், உடல் உளநலம் காக்கும் மருத்துவ குறிப்புகள் என பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கி எமது ஆக்க குழுவினரால் திருமலை மண்ணில் வெளிவரும் ஓர் இதழ் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

தடை கொண்ட இவ்வுலகில் பல படிகளைக் கடந்து பயணிக்கும் நம் விருட்சத்தின் மாத இதழோடு தொடர்ந்து பயணித்து பயன்பெறுவீராக!!

## ஆசிரியர் உரை

அன்பார்ந்த தோழமைகளே!!

கடந்த 06 வருடங்களாக சமூகத்தோடு பயணித்து வரும் தளம் அமைப்பின் ஒருங்கிணைப்பில் இவ்வருடம் (2024) தொடக்கம் இன்று வரை வெளிவந்து கொண்டிருக்கும் விருட்சம் மாத இதழின் ஆசிரியராக உங்களுடன் பயணிப்பதில் பெரும் உவகை அடைகிறேன்.

முற்று முழுதாக இளையோரின் கைவண்ணத்தில் இளையோர், மாணவர்களுக்காக வெளியாகி வரும் விருட்சம் மாத சஞ்சிகை கடந்த மாத இதழை விட முற்றிலும் மாறுபட்ட வகையில், உங்கள் மனம் கவரும் புதுப்பொலிவுடன் உங்கள் கைகளில் தவழவிருக்கிறது.

இவ் விருட்சம் கோணேசர் மண்ணில் மேலும் கிளை விட்டு துளிர்க்க இளையோர் உங்கள் ஆதரவினை படைப்புகளாக எதிர்பார்க்கின்றோம்.

இவ் இதழைப் பற்றிய கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்!

அனுப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம் :
0776243212

# 01 பெரியார் வாழ்க்கை வரலாறு – எலிசபெத் மகாராணி



20.11.1947 இல் Greece & Denmark இன் முன்னாள் இளவரசர் பிலிப் மவுண்ட்டன் பேட்டனை திருமணம் செய்த பின்னர் 1953 ஜூன் 02ம் திகதி மகாராணியாக பதிவியேற்றுக்கொண்டார். 2ம் உலகப்போரின் பொது துணைப் பிராந்திய சேவையில் பணியாற்றிய இவர் தனது 25வது வயதில் ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய 07 விடுதலை பெற்ற பொதுநலவாய நாடுகளின் ராணியாகவும், பொதுநலவாயத்தின் தலைவராகவும் பொறுப்பை ஏற்று அரசியல் சட்ட முடியாட்சி மூலம் ஆட்சி செய்தவர்.

எலிசபெத் மற்றும் அவரது சகோதரி கிராபோரட் ஆகியோரது இளமைக்கால வரலாறு "தி லிட்டில் பிரின்சஸ்" என்ற தலைப்பில் 1950 இல் வெளிவந்தது. குதிரை, நாய்கள் மீதான காதல், அவரது ஒழுங்கு முறை மற்றும் பொறுப்புணர்வின் அணுகுமுறை என்பவற்றை விபரிப்பனவாக இப் புத்தகம் விளங்குகிறது.

பிரெஞ்சு மொழியில் சரளமாக இருந்த அவர் தனது 14 வது வயதினிலே செவிலியராக பணி புரிந்தார். இவருக்கு கிடைக்கப்பெற்ற கௌரவங்கள் என்ற அடிப்படையில், எலிசபெத் மகாராணி உலகின் மிகப் பெரிய நில உரிமையாளராக விளங்கினார். இவரின் பெயரில் 6.6 பில்லியன் ஏக்கர் காணி உண்டு. மொத்தமாக 16 நாடுகளுக்கு சர்வ அதிகாரம் பொருந்திய ஏகாதிபதி அரசியாக இவர் விளங்கினார்.

எலிசபெத் மாகாராணிக்கு இரண்டு பிறந்த நாட்கள் கொண்டாடப்படுகின்றன. அரசியின் உண்மையான பிறந்தநாள் ஏப்பிரல் 21உம், அதிகாரபூர்வ பிறந்த தினம் ஜூன் மாதம் இரண்டாவது சனிக்கிழமையும் கொண்டாடப்படுகிறது. அரசியின் குடும்பத்திற்கு மட்டும் பிரத்தியோக ATM அரண்மனையின் உள்ளே அமைந்துள்ளது. அந்நாடுகளில் ஓட்டுனர் சாரதி அனுமதிப் பத்திரம் (license) அரசியின் பெயரால் வழங்கப்படுவதால், அரசிக்கு வாகனம் ஓடுவதற்கு அனுமதிப் பத்திரம் தேவையில்லை. இவர் எந்த நாட்டுக்கும் பிரயாணப் செய்வதற்கும் கடவுச்சீட்டு (passport) தேவையில்லை.

பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் அனைத்து சட்டங்களும், தீர்மானங்களும் இவரின் ஒப்புதல் (கையொப்பம்) இல்லாமல் நிறைவேறாது என்ற அளவிற்கு பெரும் பொறுப்பினை வகித்த இவருக்கு, அவுஸ்திரேலிய அரசை தடை செய்து நீக்கும் அதிகாரமும் இங்கிலாந்தின் பிரதம, மந்திரியை பதவியில் இருந்து நீக்க, பதவியில் அமர்த்துவதற்கான அதிகாரமும் உண்டு. முப்படைகளின் தலைமைப் பொறுப்பை ஏற்குமளவு அதிகாரமிக்கவராக விளங்கிய எலிசபெத்தால் அவரை வழக்குகளில் பதிவு செய்யவோ அல்லது கைது செய்யவோ முடியாது. இங்கிலாந்தின் தேவாலயத்தின் தலைவராக விளங்கியவரும் இவரே ஆவார். இவரே பெரும்பாலான அதிகாரமிக்கவராக உள்ளதால் நாட்டிற்கு வருவாய்க் கட்டணம் இவர் கட்டவேண்டிய அவசியமில்லை. எனினும், அவராகவே 1992இலிருந்து வருவாய் கட்டணம் கட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் ஒருவருக்கே இன்னொரு நாட்டுடன் போர் தொடுக்கும் அதிகார பூர்வ அறிவிப்பை அறிவிக்க முடியும். 2002, march 30 தனது 101 வது வயதில் இயற்கை எய்திய அரசி எலிசபெத் அவர்கள் இங்கிலாந்து மக்களால் இன்றுவரை பெரிதும் விரும்பப்படுகிறார். தனக்குள்ள அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யாது மிக நேர்மையாக ஆயுட் காலம் முழுவதும் செயற்பட்டமையால் இன்றும் உலக மக்களால் மிக மரியாதையாக போற்றப்படும் பெண்மணியாக உலக மக்களின் மதிப்பைப் பெற்று விளங்குகிறார்.



நிஷாந்தன் சதுர்ஷனா
மட்டிக்களி

சத்திய சோதனை என்ற நூலை எழுதியவர் மகாத்மா காந்தி இவரது வரலாற்றை அறிய உதவும் நூலாக இது விளங்குகிறது.

## 02 அன்னப் பறவை!



பொதுவாக குளிரான நாடுகளிலேயே அமைதியான நீர் ஏரிகளில் வாழ்கின்ற இவை அருகிவரும் அழகிய பறவையினமாகும். இலங்கை இந்தியா போன்ற வெப்ப வலய நாடுகளில் இவை அருகியிருப்பினும் ஏனைய சில ஐரோப்பிய நாடுகளில் இன்னும் வாழ்கின்றன.

பூமியில் நடக்கவும், வானத்தில் பறக்கவும், தண்ணீரில் நீந்தவும் கூடிய அன்னப்பறவைகள் நீரில் வாழ்ந்தாலும் அதன் இறகில் ஒருதுளி நீர் கூட ஒட்டாது. பாலும் நீரும் கலந்திருந்தாலும், அன்னம் தனியாகப் பாலினை பிரித்து அருந்தும். நீரின் அழுக்குகளில் வாழ்ந்தாலும், தான் உண்பவற்றை, அருந்துபவற்றை சுத்தமாக்கி உண்ணும் பண்புடையது அன்னப்பறவை தொடர்பாக இந்தியப் பழங்கதைகளில் கற்பனையான, அபூர்வமான இயல்புகள் பல ஏற்றிச் சொல்லப்பட்டுள்ளன.

பாலில் கலந்துள்ள நீரை விடுத்துப் பாலை மட்டும் குடிக்கின்ற பண்பு இதற்கு உண்டு. இது ஒரு மங்களகரமான குறியீடாகக் கொள்ளப்படுவதன் காரணமாக மரபுவழி அலங்காரங்களிலும், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலும் அன்னப் பட்சிக்கு முக்கிய இடம் உண்டு. இந்துக்களுக்கு மட்டுமன்றி பௌத்தர்களுக்கும் அன்னப்பட்சி மங்களமான ஒன்றாகும். இதனால் பௌத்த வழிபாட்டுத்தலங்களில் காணப்படும் அலங்காரங்களில் அன்னப் பட்சியின் உருவம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அன்னம், குள்ள வாத்து, நாரை போன்ற பறவைகள் ஒரே இனத்தை சேர்ந்தவை.

03

# திறன் விருத்தி கட்டுரை – மனம், உடல், உணர்வு வெளிப்படுத்தும் ஆளுமைத் திறன் விருத்தி




வேகமாக மாறி வரும் உலகளாவிய நிலப்பரப்பில் நாட்டின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கு நவீன உலகில் திறன் மேம்பாடு மிகவும் முக்கியமானது. ஒருவருக்குள் இருக்கும் திறன் என்பது அவரது நலன்களை, திறமைகளை மற்றும் சமூகத்தில் சாதிக்கும் குணங்களைப் பொருந்துகிறது திறன் தேவைகள் என்றால், அந்த திறன்களை மேம்படுத்துவதற்கான ஆர்வம், கல்வி, மற்றும் அனுபவங்கள் போன்றவை அடக்கும்.

திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்தும் நவீன உலகத்துடன் தொடர்புடைய சில பகுதிகள், சுய ஒழுக்கம், டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பதிறன்கள், தொழில் முனைவு மற்றும் புதுமை திறன்கள், நிலையான வளர்ச்சி திறன்கள், விமர்சன சிந்தனை மற்றும் சிக்கலைத் தீர்ப்பது, உணர்ச்சி திறன்கள், நுண்ணறிவு (IQ) திறன்கள், தழுவல் மற்றும் நெகிழ்வுத்தன்மை திறன்கள், தலைமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பு திறன்கள், புதுமை மற்றும் படைப்பாற்றல் திறன்கள் நிதி கல்வியறிவு திறன்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு திறன்கள், தொடர்பு மற்றும் தனிப்பட்ட திறன்கள், கலாச்சார திறன்கள், உலகளாவிய விழிப்புணர்வு திறன்கள், திட்ட மேலாண்மை திறன்கள், சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு திறன்கள், நேர மேலாண்மை மற்றும் உற்பத்தித்திறன், சுய மேலாண்மை மற்றும் வாழ்நாள் கற்றல் திறன்கள், தரவு எழுத்தறிவு திறன்கள், சுறுசுறுப்பு மற்றும் பொருந்தக்கூடிய தன்மை திறன்கள் , தன்னம்பிக்கை, தானியக்கம், தகவல்களைச் சீராக பரிமாறுதல், சமூகவியல் திறன்கள், ஆரோக்கியமான உறவுகள் வளர்த்தல் திறன்கள், திறமையான முடிவெடுக்கும் திறன்கள், நவீன உலக டிஜிட்டல் திறன் முதல் உ ணர்ச்சி நுண்ணறிவு வரை பரந்த அளவிலான திறன்களைக் கோடருகிறது.

தனிநபர்கள் தங்கள் திறன்களை தொடர்ந்து புதுப்பிக்க அனுமதிக்கிறது. 2024 வது தலைமுறையில், தொழில்கள் முன்னெப்போதையும் விட வேகமாக வளர்ச்சி யடைந்து வருவதால், கற்றல், அதை மீண்டும் படிக்கும் திறன் மிக முக்கியமானது. மேம்பாடு மற்றும் மறுதிறன் ஆகியவை வெறும் போக்குகள் மட்டுமல்ல, தொழில் வளர்ச்சி மற்றும் தகவமைப்புக்கான முக்கியமான உத்திகள். ஒரு தொழில் முறை அல்லது தனிப்பட்ட சூழலில் இருந்தாலும், இன்றைய வாழ்க்கையின் சிக்கல்கள் மற்றும் வாய்ப்புகளை வழிநடத்த இந்த திறன்களை வளர்த்துக் கொள்வது அவசியம்.

திறன் மேம்பாட்டில் முதலீடு செய்வதன் மூலம், தனிநபர்கள் தங்கள் தொழில் வாய்ப்புகளை, அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்துதலாம். மற்றும் அர்த்தமுள்ள வழிகளில் சமூகத்திற்கு பங்களிக்க முடியும். இன்றைய உலகில், திறமையான தகவல் தொடர்பு வெற்றிக்கு அடித்தளமாக உள்ளது. எதிர்மறையைத் தவிர்த்து , தெளிவாகவும் அன்பாகவும் பேசுவது, வலுவான வாய்மொழி மற்றும் எழுதப்பட்ட தொடர்பு திறன்களை வளர்ப்பது தொழில்முறை வளர்ச்சி மற்றும் உறவுகளை மேம்படுத்தும். "ஆற்று பவர்க்கும் அரண் பொருள் அஞ்சித்தற் தன் போற்று பவர்க்கும் பொருள்" ஆம் பலவகை ஆற்றலும் உடையவர்களாகப் பகைவர்மேல் செல்வோர்க்கு அரண் சிறந்ததாகும். ஆரண் போன்ற ஆற்றல்களை நாம் வளர்த்துக்கொண்டும், தொடர்ந்து கற்றல் அவசிய மாகிவிட்டது வாழ்நாள் முழுவதும் கற்றல், ஆன்லைன் கல்வி தளங்கள் மற்றும் ஊடாடும் கற்றல் சூழல்களால் ஆதரிக்கப்படுகிறது. வல்லுநர்கள் பல்துறை திறன் கொண்டவர்களாகவும், விரைவாகக் கற்கும் திறன் கொண்டவர்களாகவும், பல்வேறு துறையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், இருக்க வேண்டும். டிஜிட்டல் கல்வி அறிவு, விமர்சன சிந்தனை,

சிக்கலை தீர்ப்பது மற்றும் படைப்பாற்றல் ஆகியவை இன்றைய நிலப்பரப்பில் இன்றியமையாத திறன்களாகும். நவீன உலகம் திறன் மேம்பாட்டில் முனைப்புடன் செயல்படுபவர்களுக்கு வெகுமதி அளிக்கிறது. சிக்கலான சிக்கல்களைத் தீர்க்க முடியும், அவற்றைத் தீர்க்க பாரம்பரிய மற்றும் புதுமையான கருவிகளை பயன்படுத்துவதில் 2024 வது தலைமுறையின் வெற்றிகரமான நிபுணர்களை இந்த திறந்தான் அடையாளம் காட்டப்போகின்றது.

ஒரு வளமான மற்றும் உள்ளடக்கிய சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு தனி நபர்கள் வளரவும், தேவையான திறன்களை மேம்படுத்துவது அவசியம். உலகம் மாறும்போது, தனிநபர்கள் மற்றும் பொருளாதாரம் ஆகிய இருவரின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்த வேண்டும். தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் திறன் மேம்பாட்டின் கவனம் செலுத்த வேண்டும். வாழ்நாள் முழுவதும் கற்றல் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலம், வேண்டும் வாழ்நாள் முழுவதும் கற்றன் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலம் ஒவ்வொருவருக்கும் தங்கள் முழுத் திறனையும் அடைவதற்கான வாய்ப்பை உறுதிசெய்து, தங்களையும் என் சுற்றியுள்ள உலகின் வளர்ச்சிக்கும் பங்களிக்க முடியும்.



மேரி ரஜனட் நோபட் சேவியர்
மனையாவெளி



உழைகளின் தேசம்
இது எங்களின்
"திருக்கோணமலை"

பிறப்பிலிருந்து முதுமை வரைக்கும் ஒருவரது கற்றல் அனுபவங்களை விவரிப்பதுதான் கல்வி உளவியல் என்று கூறியவர்- ஏ.குரோ, சி.டி.குரோ.

அப்பா மகன் உரையாடல்

கடி ஜோக்!!

மகன் - "அப்பா! தொழில் பண்ணப் பணம் வேணும்"
அப்பா - "அதுக்கெல்லாம் கொஞ்சம் மூளை வேணும்டா"
மகன் - "நான் உங்ககிட்ட இருக்கிறத தானே கேட்க முடியும்?"

# 04 மருத்துவப் பக்கம் – இருதயப் பிரச்சினை பற்றி புரிந்து கொள்ளல்

இருதய பிரச்சினைகளானவை உலக அளவில் குறிப்பிடத்தக்க ஓர் உடல் நலப் பிரச்சினையாகும். இது மில்லியன் கணக்கான நபர்களை பாதிக்கின்றது. மாரடைப்பு, இதய செயலிழப்பு மற்றும் இருதய நோய்கள் என கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுப்பனவாக இவை விளங்குகின்றன.



இதயம் என்பது உடல் முழுவதும் இரத்த ஓட்டத்தை வழங்குவதற்கும், திசுக்கள் மற்றும் உடல் உறுப்புகளுக்கு தேவையான ஆக்சிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களை வழங்குவதற்கு பொறுப்பான ஒரு முக்கிய உறுப்பு ஆகும். இதயம் பல்வேறு நிலைகளால் பாதிக்கப்படும் போது, அது வாழ்க்கை தரம் குறைந்து கடுமையான சந்தர்ப்பங்களில் அகால மரணத்திற்கு வழிவகுக்கும். இதய பிரச்சினைகள் அவற்றின் காரணங்கள் அறிகுறிகள் மற்றும் தடுப்பு முறைகள் ஆகியவற்றை புரிந்து கொள்வது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் அபாயங்களை குறைப்பதற்கும் முக்கியமானதாகும். மிகவும் பரவலான இதய நோய்களில் ஒன்று கரோனரி தமனி நோய் (C.A.D) இந்நோய் நிலைமையானது இதயத்திற்கு செல்லும் குருதியின் அளவை கட்டுப்படுத்துகின்றது.இதனால் அடிக்கடி மார்பு வலி அல்லது மாரடைப்பு ஏற்படும். கரோனரி தமனி நோயானது உயர் இரத்த அழுத்தம், அதிக கொழுப்பு அளவு, நீரிழிவு நோய், புகை பிடித்தல், உடல் பருமன் மற்றும் உட்கார்ந்த வாழ்க்கை முறை போன்ற காரணங்களால் ஏற்படக்கூடும்.

கடுமையான மாரப்பு வலி, கைகள், முதுகு, கழுத்து அல்லது தாடையில் வலி குளிர், வியர்வை மற்றும் குமட்டல் என்பன மாரடைப்பின் அறிகுறிகள் ஆகும். இரத்த ஓட்டத்தை மீட்டெடுக்கவும், இதய பாதிப்பை குறைக்கவும் இந்த சூழ்நிலைகளில் உடனடி மருத்துவ கவனிப்பு முக்கியமானதாகும். இந்த ஆபத்து நிலைமைகளை அறிந்து கொள்வது, சீரான உணவுமுறை, வழக்கமான உடல் செயற்பாடுகளில் ஈடுபடல், புகைப்பிடித்தலை தவிர்த்தல் போன்ற செயற்பாடுகள் இதயத்தின் ஆரோக்கியத்தை பேணலாம்.



மற்றொரு இதய நோய் இதய செயலிழப்பு ஆகும். இது உடலுக்குத் தேவையான அளவு இரத்தத்தை இதயத்தால் பம்பச் செய்ய முடியாத நிலைமையாகும். கரோனரி தமனி நோய், உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற பல்வேறு காரணிகளால் இது ஏற்படலாம். சோர்வு, மூச்சுத் திணறல், கால்கள் மற்றும் கணுக்கால்களில் வீக்கம் ஆகியவை இதய செயலிழப்புக்கான அறிகுறிகளாகும். இதய செயலிழப்பு என்பது ஒரு நாள்பட்ட நிலையாகும், இதற்கு தொடர்ந்து மேலாண்மை தேவைப்படுகிறது, வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் மருந்துகள், ஆரோக்கியமான வாழ்க்கை முறை

கனிசமான அளவு உதவும். இவை பாதிப்பில்லாத படபடப்பு முதல் உயிருக்கு ஆபத்தான நிலைகள் வரை இரத்தத்தை திறம்பட பம்ப செய்யும் இதயத்தின் திறனை சீர்குலைக்கும். தலைச்சுற்றல், மயக்கம் மற்றும் விரைவான இதயத் துடிப்பு ஆகியவை அறிகுறிகளாக இருக்கலாம்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பது இதய பிரச்சனைகளை உருவாக்கும் அபாயத்தை கணிசமாக குறைக்கும். உடல் எடையை பராமரித்தல், வழக்கமான உடற்பயிற்சியுடன் பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள் மற்றும் மெலிந்த புரதங்கள் நிறைந்த சீரான உணவை பராமரித்தல் என்பன இதில் அடங்கும். புகைபிடிப்பதை நிறுத்துதல் மற்றும் மன அழுத்தத்தை நிர்வகித்தல் ஆகியவை இதய நோய் அபாயத்தைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் அளவுகள் மற்றும் ஒட்டுமொத்த இதய ஆரோக்கியத்தைக் கண்காணிப்பதற்கு வழக்கமான சுகாதாரப் பரிசோதனைகள் அவசியம், தேவைப்பட்டால் மருத்துவரின் ஆலோசனையை பெறுதல்.

முடிவில், இதயப் பிரச்சனைகள் பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன, ஆனால் விழிப்புணர்வு மற்றும் முன்முயற்சியுடன், தனிநபர்கள் செயற்படுவதன் மூலம் இதனை குறைக்க முடியும். அவர்கள் ஆபத்தை குறைக்க பல்வேறு வகையான இதய நிலைகளைப் புரிந்துகொள்வது, அவற்றின் அறிகுறிகளை தெரிந்து கொள்வது மற்றும் இதய ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது ஆகியவை இதய ஆரோக்கியத்தை பராமரிப்பதில் முக்கியமான படிகளாகும். இதயநோய்கள் பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இதய நோயை எதிர்த்துப் போராடுவதிலும், அனைவருக்கும் ஆரோக்கியமான எதிர்காலத்தை மேம்படுத்துவதிலும் நாம் முன்னேறி வருகின்றோம்.

நவநீதன் பிரநீதன்
நிலாவெளி



அதிகமான தேர்வுகள் ஆபத்தானவை – தேர்வுகள் அதிகமாக இருக்கும்போது, நம் முடிவெடுக்கும் திறன் குறையும், இது "decision fatigue" எனப்படும்.

1964 இல் இலங்கை மீனவக் கூட்டுஸ்தாபனம் தாபிக்கப்பட்டது.

05

# குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | | | 3 | ■ |
| 4 | 5 | ■ | ■ | ■ | | ■ | ■ | | 6 |
| | ■ | 7 | | | | | ■ | ■ | ■ |
| | 8 | ■ | 9 | ■ | | ■ | 10 | | 11 |
| | | 12 | ■ | ■ | | ■ | | ■ | ■ |
| ■ | | ■ | | | | | 13 | ■ | 14 |
| ■ | ■ | | ■ | ■ | | ■ | 15 | | |
| ■ | | 16 | | 17 | ■ | ■ | ■ | ■ | |

<u>இடமிருந்து வலம்</u>

1. கடைசியில் மிஞ்சுவது ஒரு பிடி 'இது' தான்.
2. குரு ஸ்தலம்;
3. அற்ற வினாக்கள் இல்லை
7. அப்பாவுக்கு பெரியவரை 'இப்படிக் குறிப்பிடுவோம்.
15. வாழை குழை போல் நெற்__

<u>வலமிருந்து இடம்</u>

6. போலீசின் விரைவான நடவடிக்கையால், __யாளிகள்பிடிபட்டனர்.
8. தனக்கென ஒரு இலக்கை கொண்டவன் இலட்சிய__
11. அமெரிக்க நாட்டில் உள்ள ஒரு இனத்தவர் __ந்தியர்கள்.
12. தன் ஒழுக்கமான செயலால், மற்றவர்களுக்கு முன்—'யாக இருந்தான்.
13. வாக்குவாதம்;(ஒத்தசொல்)
17. உலகின் பெரிய நீர்வீழ்ச்சிகளில் ஒன்று.

<u>மேலிருந்து கீழ்</u>

1. நடிகையர் திலகம் என்று புகழ் பெற்ற நடிகை.
2. ஆடி பதினெட்டாம் நாள் கொண்டாடப்படுவது.
3. வாழை 'இது' தள்ளும்
8. சரியான நேரத்தில் சரியான காரணத்திற்காக __.
10. ஏதாவது ஒரு விசயத்தில்நன்கு தேர்ச்சிபெற்றவனை இப்படி' குறிப்பிடுவர்.
14. பாவங்கள் செய்பவன்

<u>கீழிருந்து மேல்</u>

5. நேரம்ஆங்கிலத்தில்
9. பெரியவர்களுக்கு, '—'யாதை தர வேண்டும்.
16. டெலஸ்கோப்பை கண்டுபிடித்தவர்?

நவநீதன் பிரதீஷன்
நிலாவெளி



06

# கவிதை – நம்மை வளர்த்த கல்வி



என்ன தவம் செய்தோமோ
பூமியிலே மானிடராய் அவதரித்தோம்
துள்ளி வளரும் பருவம் வரை
எள்ளளவும் பிரிவினை அறியவில்லை

பள்ளி செல்லும் காலத்தில
உறவுகளின் பிரிவினை அறிந்து கொண்டோம்
கல்வி என்னும் அமிர்தத்தை
அள்ளிப் பருக பயந்து நின்றோம்

கைபிடித்து அழைத்த ஆசானை
கருநாகத்து கூட்டமென இகழ்ந்து பேசினோம்
அறிவான பாடங்கள் அனைத்தினையும்
புரிதலின்றியே விலக்கி வைத்தோம்

ஆரம்பக் கல்வியை முடிக்கையிலே
அறிவில் முன்னேற்றமின்றி கடந்து வந்தோம்
நடுநிலைக் கல்வியைப் பயில
நாடுகடந்த மானிடராய் தினம் விழித்தோம்

உளியென சில ஆசான்கள்
நம்மையே தினமும் சிதைத்து செதுக்க
பளிரென்ற ஒளியினைக் கண்ட
காட்டுயிர் எழுதுகோலாய் நின்றோம்

தட்டு தடுமாறி நடுநிலைக்
கல்வியைக் விட்டுவிடாமல் கடந்தோம்
பல்வேறு இன்னல்களுக்கு இடையில்
நடுநிலைக் கல்வியை படிக்க முயன்றோம்

பருவக் குறும்புகள் மனதைப்பற்ற
காணமுடியாத ஆசையால் கிறுகிறுத்தோம்
பள்ளியின் கல்வியை விடவும்
பணங்கட்டி வெளியில் பயிற்சிப் பெற்றோம்

விளங்காத பாடத்தை வைராக்கியமாய்
மனப்பாடம் செய்து கற்று நிறைந்தோம்
எய்த அம்பாய் இறுதியில்
இலக்கில் சென்றே தடுமாறி விழுந்தோம்

உயர்நிலைக் கல்வியோ வாளோடு
வனப்பாய் நின்று நம்மை ஏளனிக்க
வலமிடம் எல்லாம் மறந்தே
வசமாய் சிக்கியதாய் தினமும்
உணர்ந்தோம்

அறிவைச் சிதைக்கும் பருவத்தின்
எழுச்சியால் நடு நடுங்கியே துன்பமுற்றோம்
அதிகமான நண்பர்களின் நட்பினால்
துணிவாய் நற்கல்வியை நலமாய்
முடித்தோம்

முடித்த பின்தான் தெரிந்தது
படித்த எல்லாம் மிகச் சிறிதென்று
தொழிற்கல்வி இளநிலை பட்டம்
மருத்துவம் பொறியியல் கணக்கியல் என்று
கணக்கிலா துறைகள் கோலோச்ச
கண்ணைக் கட்டி கடலில் இறங்கியதாய்
பணந்தான் அப்போது படிப்பை
தனதாக்க மிடுக்காய் வந்து நின்றதே
இல்லாத நிலையில் இருந்ததால்
நல்லதை விடுத்து கிடைத்ததை
படித்தோம்

விருப்பத்திற்கு உரிய பாடம்
கிடைக்காததால் கிடைத்த பாடத்தில்
உழன்று
துன்பம் நிறைந்த வாழ்வை
நல்ல முறையில் வாழ்வது இறைச்செயலே

ஜோதிகா மகேந்திரன்
தம்பலகாமம்



## 07 நவீன கவிதை – நம் கல்வி முறையும் இக்கால வாழ்வியலும்



கம்பனை மிஞ்சிய கற்பனை சக்தி கொண்டவள் ஒரு கர்ப்பிணியே - ஏனென்றால்
கருவின் கல்வியையே தன் கற்பனையால் கருவிற்கே திணித்தவள் அல்லவா?
கரு சிசுவாக மாறி கருவறை விட்டு தாய்மடி தவழும் போதே - அவர் அவர்கள்
கற்பனையை சிசுவிடம் பறைசாற்றும் புத்தி மான்கள் பலர் இங்கு உளர்.

மூன்றெழுத்து படைத்த கல்வியின் தகுதி இங்கு புள்ளி என்னும் மூன்றெழுத்தே
மூன்று மணி நேர புள்ளிக்காக மனனம் செய்யத் தொடங்கிய மனம்
மூச்செடுத்து மனனம் செய்வதை மட்டுமே வழக்கமாக்கியது
மூளைக்கு கொடுத்த விருந்து 3 மணி நேரத்தில் சமிபாடடைந்தது எப்படி?

திறமையை மூன்று மணி நேரத்தில் தீர்மானிக்கும் திறமைசாலிகள் - பலர்
திரண்டுள்ள எமது நாடு சர்வதேச நாடு போலும்!
திறமையான கல்வி அறிவு வீதம் கொண்ட எமது நாடு
தினமும் இறக்குமதி செய்யும் நாடாக இருப்பது ஏனோ?

எமது கல்வியை தவறு எனவும் கூறவில்லை - அதே சமயம் எமது கல்வியை சரி
எனவும் ஏற்கப்போவது இல்லை
மனனம் செய்யும் கல்வி வரையறை கல்வியே மனனத்துடன் சேர்ந்த பயிற்சியே
முடிவற்ற கல்வி.

சி. கிருஷாலினி
ஆனந்தபுரி





### கடி ஜோக்!

யாரோ 1 - "நேருக்கு நேரா பேயை பார்த்த கூட அதோ போறானே
அவன் பயப்பட மாட்டான்"
யாரோ 2 - "ஏன் ...?"
யாரோ 1 - அவன் மாடல் பெண்களுக்கு மேக்கப் மேனாக பத்து
வருஷமா இருக்கிறான்."😁



## 08 சிறுகதை – கடந்து செல்லுங்கள்

தூங்க முடியாத அளவிற்கு வைதேகி மனதில் சிந்தனை அலைகள் தோன்றிக்கொண்டிருந்தன. அவள் அலைபேசியின் சைட் பட்டனை அழுத்தி நேரத்தை பார்க்கிறாள். மணி நள்ளிரவு பன்னிரண்டடை நெருங்கிக் கொண்டிருந்தது. வழமையாகவே நான்கு மணிக்கு அலாரம் வைத்து எழும்பிவிடும் பழக்கம் கொண்டவள். அந்த நேரத்தில் எழுந்து வேலைகளை தொடங்கினால் தான் குறித்த நேரத்திற்குள் வீட்டு வேலைகளை முடித்து அவளால் வேலைக்கு தயாராக முடியும்.



நான்கு மணிக்கு எழுந்துகொள்ளவேண்டுமென்றால் குறைந்தபட்சம் இரவு ஒன்பது, பத்து மணிக்குள் உறங்கிவிட வேண்டும். வைதேகி தன்னுடைய தொழில் சூழலில் தான் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதாய் தோன்றிய உணர்வே அவளை தூங்க விடாமல் சிந்திக்க செய்து கொண்டு இருந்தது. வேலைக்கு புதிதாய் சேர்ந்ததிலிருந்து, இப்போது வரை நடக்கும் விடயங்கள் அவள் மனத்திரையில் ஓடியது.

நேர்முகதேர்வில் தெரிவுசெய்யப்பட்டு வேலைக்கு சேர்ந்த ஆரம்ப , காலங்களில் தன் சக ஊழியர்களிடம் பேசிப்பழகி மகிழ்வாய் இருந்தாள். ஆனால் பல வருடங்களாக அங்கேயே தொழில்புரிகின்ற அவர்கள் இரு வேறுபட்ட முகங்களை கொண்டிருந்தனர். வைதேகியிடம் நல்லவர்களைப் போல காட்டிக்கொண்டு, அவள் இல்லாத சமயங்களில் அவளைப் பற்றி புறம் பேசினார்கள். அவளுடைய வேலைகளில் குறைகளை கண்டுபிடித்து, அதனை திருத்த கற்றுக்கொடுப்பதற்கு பதிலாக அவளை ஏளனம் செய்ய தொடங்கினார்கள். வைதேகி தன் தவறுகளை தானே சரிசெய்த போதிலும், அடுத்த சில வேலைகளில் அவளுடைய ஆலோசனைகளை ஏற்க மறுத்தார்கள். இத்தகைய எதிர்மறை சூழலிருந்து வெளியேற தெரியாது அவள் திணறினாள். கடந்த சில வாரங்கள் வைதேகிக்கு அவ்வளவு எளிதாய் இல்லை. அலுவலகத்திற்கு செல்லும் ஆர்வமும், விருப்பமும் துளித்துளியாய் குறையத் தொடங்கி இருந்தது ஆனால் தன்னுடைய கனவை நிஜமாக்க வேண்டுமென்றால் இந்த வேலையில் தனக்கென ஒரு நிலையான இடத்தை அடைய வேண்டும் எனவும் தோன்றியது. தன் இலக்கை அடைய தன்னுடைய உழைப்பையும், முயற்சியையும் இரட்டிப்பாக்க வேண்டும் என்று எண்ணினாள்.

மறுநாள் சிரமப்பட்டு தூக்கத்திலிருந்து எழுந்தவள் சில புதிய சிந்தனைகளை மனதில் எண்ணிக்கொண்டு வேலைக்கு தயாராகி சென்றாள். தன்னைப் பற்றி குறை கூறுபவர்களை பார்த்து புன்னகைத்தாள். அடுத்தவரது வசைச் சொற்களுக்கு காது கொடுக்காது, தன்னுடைய வேலைகளில் சிறு கவனக்குறைவுகள் கூட ஏற்படாவண்ணம் பார்த்துக்கொண்டாள். தன்னைப்பற்றி புறம்பேசுபவர்களிடமிருந்து விலகி நடந்தாள். இப்படியே சில காலம் சென்றது. மனமும் சோர்வடைந்தது. ஆனால் தன் வேலைகளை சரிவர செய்வதனை நிறுத்தி விடவில்லை. சக ஊழியர்களிடமிருந்து கிடைத்த தனிமை கவலையை கொடுத்தாலும், அவளுடைய வேலைகளை இப்பொழுது சில மேலாளர்கள் ஏற்க தொடங்கினர்.அவளிடம் சில பொறுப்புக்களை ஒப்படைத்ததுடன், அவளுடைய வேலைகளில் ஏற்படும் குழப்பங்களை தீர்க்கவும் உதவி செய்தனர். இது அவளுக்கு ஒரு புது உத்வேகத்தை கொடுத்தது.

அவளுடைய தொடர்ச்சியான விடாமுயற்சியை கண்ட சில சக ஊழியர்கள் அவளிடம் நட்பு பாராட்ட முயன்றனர். அனைவரை பற்றியும் நன்றாக புரிந்து கொண்டவள், அவர்கள் நட்பை ஒதுக்கியும்விடாது, அதிகமாக நெருங்கவும்விடாது பார்த்துக் கொண்டாள். அனைத்து சவால்களையும் தைரியமாக எதிர்கொண்ட வைதேகி, தன் இலக்கை அடைந்து, இப்பொழுது அந்நிறுவனத்தின் அதிக பொறுப்புக்களை கொண்ட ஒரு மேலதிகாரியாக திகழ்கிறாள். அவளை பற்றி புறம் பேசுபவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் யாருடைய வசைச்சொல்லும் இப்பொழுது அவள் உறக்கத்தை கெடுப்பதில்லை "காய்க்கின்ற மரமே கல்லடி படும்" என்பதனை புரிந்து கொண்ட வைதேகி எந்த தடைகளையும் கடந்து செல்ல இப்பொழுது பழகியிருந்தாள். தன்னைப் போன்று வேலைக்கு புதிதாய் இணைந்து கொள்பவர்களுக்கு அவள் கூறும் அறிவுரை "கடந்து செல்ல கற்றுக் கொள்ளுங்கள்." என்பதே ஆகும்.

முற்றும்.

சங்கீதன் பவித்திரா
திருகோணமலை.





அலுவலகத்தில் ஊழல் செய்யும் மற்றவர்களை எடுத்துக்காட்டாக கொண்டு நேர்மையான ஒரு நபரும் ஊழல் செய்ய பழகலாம். இவ்வாறு, ஒரு நபரின் சகவாசம் அவரின் ஆளுமையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. தன் ஆளுமையை மேம்படுத்திக்கொள்ள விரும்பும் ஒருவர் முதலில் தன்னைத் தானே புரிந்து கொள்ள வேண்டும். அதன் பின் பிறரையும் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இரத்தன தூபீபம் என்று
அழைக்கப்படுவது - இலங்கை

இரு தேசியக் கொடிகள் உள்ள
நாடு – ஆப்கானிஸ்தான்

# உளவியலில் ஆளுமை!!



இலத்தின் மொழியில் இருந்து பிறந்த "PERSONALITY" என்னும் சொல் ஆளுமையை குறிக்கின்றது. ஆளுமை என்பது ஒருவனது பண்புகளைக் குறிப்பதாக பொருள் கொள்ளப்பட்டாலும், பல்வேறு அறிஞர்களால் ஆளுமை பற்றிய வரைவிலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. பொதுவாக நோக்கும் போது, ஆளுமை என்பது ஒருவர் தமக்குரிய பண்புகளுக்கேற்ப தான் நடத்தலும், ஏனையவர்களிடம் நடந்து கொள்ளும் நடத்தைகளின் தொகுப்பு என வரையறை செய்யலாம்.

ஆளுமை ஒருவரை இன்னொருவரிடமிருந்து பிரித்துக் காட்டக் கூடியது. ஒருவன் தன் தனித்தன்மையான நடத்தையால் தன்னை சூழ்நிலைக்கு ஏற்றதாக உருவாக்கிக் கொள்ள ஆளுமை உதவுகிறது. தன்னுணர்வு என்பது ஆளுமையின் மிக முக்கியமான ஒரு பண்பாகும். சமூகத்தில் ஒருவன் எவ்வாறு நடந்து கொள்கின்றான், சமூகத்தில் உள்ள பிறர் அவனது நடத்தையை பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதை பொறுத்தே ஆளுமை அமைகிறது. இது மரபு நிலை, சூழ்நிலை இரண்டின் விளைபயனாகும். ஒருவன் தன் வாழ்வில் எத்தகைய குறிக்கோள்களை அடைய முயல்கிறான் என்பதை பொறுத்தும், கற்றல் அனுபவங்கள் சேர்ந்துமே ஆளுமை வளர உதவுகிறது.



உடல் உள்ளம் சார்ந்த ஒரு சமூக உயிரியாக மனிதன் விளங்குகின்றான். ஆதலால் அவனுடைய ஆளுமையை தீர்மானிப்பதில் சமூக, உளவியல், உயிரியல் என்கின்ற மூன்று காரணிகள் பெரும்பங்கை வகிக்கின்றன. ஒருவரின் ஆளுமை சிசு பருவம், ஆரம்பகால குழந்தை பருவம், விளையாடும் வயது, பள்ளி வயது, பூப்பு பருவம், விடலை பருவம், இளமை, நடுவயது மற்றும் முதிர்ச்சி என்னும் எட்டு நிலைகளிலும் தொடர்ந்து உருவாக்கப்படுகிறது. ஆதலால் இது ஒரு நிலையான நிகழ்வு இல்லை. மாறாக, இது கருவுற்ற நொடியில் ஆரம்பித்து ஒருவரின் கடைசி மூச்சு வரை தொடரும் ஒரு பன்முக தொடர் செயல்பாடாகவே நோக்கப்படுகிறது. ஆளுமையானது விருத்தியடைய கூடிய ஒன்றாகும். காலம் செல்ல செல்ல ஒருவரின் ஆளுமையில் சில பண்புகளின் ஆதிக்கம் குறையலாம் அல்லது வலுவடையலாம், சில பண்புகள் மறைந்து, அப் பண்புகளுக்கு பதிலாக வேறு பண்புகள் தோன்றலாம் அல்லது முற்றிலும் புதிதான பண்புகள் தோன்றலாம். ஆளுமையில் மாற்றம் என்ற அடிப்படையில் குழந்தை பருவத்திலிருந்து விடலை பருவத்திற்கு செல்லும்போது, ஒரு இளைஞன் காதலில் விழும்போது, திருமணத்தின் ஊடாக, குழந்தைகளை பெற்றெடுப்பதின் ஊடாக, மதத்தின் மேல் நம்பிக்கை உண்டாவதால் அல்லது இழப்பதால், அல்லது மாறும் அரசியல் சார்புகளால் மாற்றத்தை உணரலாம். நாம் பல பண்புகளை மற்றவர்களை பின்பற்றி பெற்றுக்கொள்கின்றோம். தாய் அன்பாக இருந்தால் மகளும் அவரை போலவே அன்பு காட்டலாம். அதே போல ஒருவன் திருடுதல், புகை பிடித்தல் போன்ற பண்புகள் உடைய குழுவினரோடு பழகும் போது, அப்பழக்கம் அவனுக்கு உடனே தொற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களும் அதிகமாகும்.

தன் பலம் மற்றும் பலவீனங்களை சுய பரிசோதனை செய்து கொள்வது அவசியமாகும். தன் தனிப்பட்ட இலக்குகளை தீர்மானித்து, அதன்வழி பயணிப்பதன் மூலம் புதிய விடயங்களை கற்றுக்கொள்ளவதும் ஆளுமையின் ஓர் அங்கமாகின்றது. எமது எதிர்காலம் சிறக்க வேண்டுமாயின் சிறந்த ஆளுமையுடைய ஓர் தனிநபராக திகழ வேண்டும். அதனடிப்படையில் ஆளுமை என்பது தொடர்பான புரிதல் நம்மிடையே வளர்த்துக்கொண்டு எதிர்காலத்தில் மிளிர்வோம்!!.

எதிர்காலம் நாமே!



மகாலிங்கம் டிலானி
இலிங்கநகர்



இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அநுரகுமார திஸாநாயக்க நாட்டின் 9 ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

தேஷா அரவிந்தன்



இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது பெண்கள் பாடசாலை - உடுவில் மகளீர் கல்லூரி (1828)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலைமைச் செயலகம் எங்கே அமைந்துள்ளது?
நியூயோர்க்கில்

## எமது கல்விப் பாரம்பரியம்..

அறிவை புகட்டுவதாக மட்டுமில்லாமல், ஒரு மனிதனுக்கு உயரிய பண்புகளை போதித்து, அவனை மேன்மையான மனிதனாக மிளிரச் செய்வதே கல்வியின் உண்மையான நோக்கமாகும். அத்தகைய கல்வி முறைகளில் நம் பண்டைய கல்வி முறையான குருகுலக் கல்வியும் ஒன்றாக விளங்கியது. நாகரீகம் வளர வளர இக் கல்வி முறையிலும் மாற்றம் ஏற்பட்டு இன்றைய நவீன கால கல்வி முறை எம் வாழ்வில் விரும்பியோ விரும்பாமலோ புகுத்தப்பட்டுள்ளது. குருகுலக் கல்வி முறையை அடுத்து கட்டிடங்கள் இல்லாத காலத்தில் மரத்தின் கீழ் இருந்து கல்வி கற்று அதன் பின்னர் பாடசாலை கல்வி என வளர்ச்சி அடைந்து தற்காலத்தில் ஒன்லைன் கல்வி முறைமை என்பது சமூகத்தில் புகுத்தப்பட்டுள்ளமை வியக்கத்தக்க ஒரு விடயமாகும். அக் காலம் தொட்டு இன்று வரை மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்கான ஓர் உத்தியாக கல்வி என்பது காணப்படுகிறது.

"கல்லாதான் மனது இருளின் உறைவிடம்" எனும் முன்னோர் பார்வையில் கற்பதற்கான சிறந்த பருவமாக இளமைப்பருவம் விளங்குகிறது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்ற கூற்றிற்கு இணங்க, இளமை காலத்தில் கற்கும் கல்வியானது, பச்சை மரத்தில் ஆணி அடிப்பது போல மிக இலகுவாக பதியக்கூடியது. இதனாலேயே இளமையிலே கல்வியை சரி வர பயில வேண்டும். ஒரு மரத்திற்கு வேர் எவ்வளவு முக்கியமோ அதே போல தான் ஓர் மனிதனுக்கு கல்வியும். அளிவற்றதும், அள்ள அள்ள குறையாததுமான வளமான செல்வமாக நோக்கப்படுகிறது.

இன்றைய கால கல்வி முறை பற்றி பார்க்கும் பொழுது, ஆரம்ப காலத்தை விட புதிய தொழிநுட்பங்களின் வருகையுடன் இன்றைய கல்வி முறையில் படைப்பாற்றல், சிக்கலைத் தீர்ப்பது மற்றும் மாற்றியமைக்கும் திறன் ஆகியவற்றை வளர்க்கும் முறைமை அவசியமாகிறது. நவீன கல்வி முறை பாரம்பரிய பள்ளிக்கு அப்பாற்பட்டது. இன்றைய தொழில் வாய்ப்புக்களில் புதிய திறன்கள் உருவாகும் போது வாழ்நாள் முழுவதும் கற்றல் இன்றியமையாததாகிவிட்டது. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விரைவான வேகம், தொடர்ச்சியான கல்வி, தொழில்முறை வளர்ச்சியை அவசியமாக்குகிறது. எனவே நமது கல்வி முறையானது வாழ்நாள் முழுவதும் கற்றல் கலாச்சாரத்தையும், தனிநபர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அறிவு மற்றும் திறன்களைத் தேடவும் ஊக்குவிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவதாக விளங்குகிறது. இன்றைய நாகரீகச் சூழலின் கல்வி முறையில் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆன்லைன் கல்வி போன்ற புதிய கற்றல் அம்சங்கள் காணப்படுகின்றன. இதனால் மாணவர்கள் உலகின் எந்த மூலையிலிருந்தும் தங்குதடையின்றி கல்வி பெற முடிகிறது.

சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இக் கல்வி முறையால் சமூக வித்தியாசங்கள் மற்றும் சமூக இடைவெளிகள் உருவாகும் வாய்ப்பு உள்ளதோடு, தனிமனிதரின் கிரகித்தல் திறனிலும் பாரிய வீழ்ச்சித் தன்மை காணப்படுகிறது. இருப்பினும் இவ் யுகத்தில் இன்றியமையாத ஓர் அம்சமாக இவை மனித வாழ்வில் பின்னிப்பிணைத்துள்ளன. இக்காலத்தில், மக்கள் தாம் வாழும் முறைகளிலும், கல்வி மற்றும் நிலைத்த தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றிலும் மாற்றங்களை சந்தித்து வருகின்றனர்.



கல்வி பயிலும் பலரும், அரச பதவிகளில் தொழில் புரிவோரும் தமது வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் ஆன்லைனில் வேலை செய்து வருமானத்தை ஈட்டிக் கொண்டிருக்கின்றனர். இவ் வருமான முறையால் குடும்ப வாழ்க்கை முறையிலும், தனி நபர் வாழ்க்கை முறையிலும் பெரிதும் பாதிப்புக்களை ஏற்படுகின்றன.

இன்றைய நவநாகரீக யுகத்தில் அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்வதானாலும், ஆடம்பர தேவையை பூர்த்தி செய்வதானாலும் இலக்கு கல்வி முறையான நவீன கல்விமுறையை பின்பற்றுவதே புத்திசாலித்தனமான விடயமாகின்றது.

*"இவ் உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி" - நெல்சன் மண்டேலா*

**ஜெயச்சந்திரன் கோபிநாத்**
**உவர்மலை**





மனிதர்கள் பழக்க வழக்கங்களில் நீண்ட காலம் சிக்கியிருப்பார்கள் – ஒரு பழக்கத்தை உருவாக்குவது சுமார் 21 முதல் 66 நாட்களுக்கு எடுத்துக்கொள்ளலாம், ஆனால் பழக்கத்தை முற்றிலும் மாற்றவோ அல்லது புதிதாக உருவாக்கவோ நிறைய நேரம் தேவைப்படும்.

# 11 நம் கல்வி முறையும் இக்கால வாழ்வியலும்

இலங்கையின் புதிய கல்வி சீர்திருத்தமானது, வேகமாக மாறிவரும் உலகின் கோரிக்கைகளுக்கு மாணவர்களையும் இளைஞர்களையும் சிறந்த முறையில் சித்தப்படுத்துவதை இலக்காகக் கொண்டு அதன் கல்வி முறையை நவீனமயமாக்கும் நாட்டின் இலட்சியத்தை பிரதிபலிக்கின்றது. புதிய கல்வி வாழ்வியலின் முக்கிய நோக்கம் இளம் சமுதாயத்தை சமூக அளவில் போட்டியிட தயார்படுத்துவதாகும். சர்வதேச விவகாரங்கள் மற்றும் கலாசார கல்வி அறிவு ஆகியவற்றுடன் ஆங்கில மொழி புலமை பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. காலநிலை மாற்றம் முதல் தொழில்நுட்ப முன்னேற்றம் வரையிலான உலகளாவிய பிரச்சினைகள் குறித்து மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் மற்றும் பெருகிய முறையில் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட உலகில் செழித்து வளர திறன்கள் மற்றும் அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் வளர்ந்து வரும் இக்கால STEAM கல்விமுறை (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம்) என்னும் பாடசாலை கல்வியை சிறப்பித்து காட்டுகிறது. அறிவியல் மற்றும் கலைத்துறைகள் இரண்டையும் இணைத்து தொழில்நுட்ப அறிவுக்கும் படைப்பாற்றலுக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைத்து, முழுமையாக சிந்திக்கக்கூடிய புதுமையாளர்களின் தலைமுறையை வளர்ப்பதை சீர்திருத்தம் நோக்காக கொண்டுள்ளது. STEAM பாடங்களில் கலைகளின் ஒருங்கிணைப்பு உணர்ச்சி நுண்ணறிவை வளர்கிறது. கூட்டு மற்றும் பன்முக கலாச்சாரங்கள் சூழலில் பணிபுரியும் மாணவர்களின் திறனை மேம்படுத்துகிறது. இவை இன்றைய 2024ஆம் ஆண்டில் மாணவர்களின் இளைஞர்களின் பாடசாலை உயர்கட்ட வாழ்வை மாற்றும் ஆரம்பத் தொடக்கமாகும்.

சில மாணவர்களின், இளைஞர்களின் தேர்வு பல்கலைக்கழகமாக இருக்கும் பட்சத்தில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆங்கிலம் மற்றும் மற்ற உலக மொழிகள் மூலம் கல்வியை விரிவாக்கம் செய்கின்றன. இளைஞர்கள் உலக அளவிலான கல்வி நிலைகளை அனுபவிக்கக் கூடிய வாய்ப்புகளை பெறுகின்றனர். இதன் மூலம், மாணவர்கள் வெளிநாட்டில் படிக்கவும் அல்லது பணியாற்றவும் திறமைகளை மேம்படுத்துகின்றனர். பல்கலைக்கழகங்களில் இலங்கை சமூக மற்றும் அரசியல் நிலைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் கற்றல் முறைகள் அறிமுகமாகின்றன. இளைஞர்கள் சமூகநீதி, சமத்துவம் மற்றும் அரசியல் நிலைகள் குறித்த விழிப்புணர்வுடன் செயல்படுகின்றனர். இதனால் அவர்களின் சமூக செயற்பாடுகள் மற்றும் அடுத்த தலைமுறையினர் மீது நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும்.

தற்போது இலங்கை திறந்த பல்கலைக்கழகம், அரச பல்கலைக்கழகங்களின் வெளிவாரி படிப்புகள், மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் ஆனது பல்கலைக்கழகங்களுக்கு செல்லாமலே அதே பல்கலைக்கழக மானியங்கள் ஆணை குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தை பெற்றுக்கொள்ள இந்த பல்கலைக்கழகங்களில் University of Colombo, University of Peradeniya, University of Eastern, University of Jayewardenepura, University of Moratuwa, University of Wayamba, University of Kelaniya, University of Rajarata, University of Ruhuna, University of Sabaragamuwa பல வழிமுறைகள் வந்துள்ளது.

உயர்தர பரீட்சைக்கு தோற்றி சித்தி பெற்ற மாணவர்களுக்கு SRILANKA LAW COLLEGE, NATIONAL INSTITUTE OF BUSINESS MANAGEMENT (NIBM), NATIONAL SCHOOL OF BUSINESS MANAGEMENT (NSBM), CINEC CAMPUS, UNIVERSITY OF COLOMBO SCHOOOL OF COMPUTING , BRITISH COLLEGE OF APPLIED STUDIES (BCAS), CHARTERED ACCOUNTANTS OF SRILANKA, INSTITUTE OF BANKERS OF SRILANKA (IBSL), SPECTRUM INSTITUTE OF SCIENCE AND TECHNOLOGY (SIST), PATHE ACADEMY (MLT), ARTHUR C CLERKE INSTITUTE FOR MODER5N TECHNOLOGIES, SRILANKA INSTITUTE OF TOURISM AND HOTEL MANAGEMENT, CITY CEYLON OF ARCHITECTURE, CHARTERED INSTITUTE OF MANAGEMENT ACCOUNTANTS (CIMA), ASSOCIATION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS (ACCA), IESL COLLEGE போன்ற அரச, தனியார் இலங்கை பல்கலைக்கழகங்களில், இந்தப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க, வட்டி இல்லா கடன் வசதிகளை அரசாங்கம் வழங்குகின்றது. இதைவிட இலங்கையில் பதிவு செய்யப்பட்ட தனியார் மற்றும் இணை அரசாங்க கல்வி நிறுவனங்கள் பல உள்ளன. அவற்றின் மூலம் உங்கள் கல்வியை தொடரலாம்.

SLIATE ஆனது பல்கலைக்கழகத்திற்கு நுழைய முடியாத இளநிலையாளர்களுக்கு டிப்ளமோ கற்கைநெறியை இலவசமாக வழங்குகிறது. HNDE (Civil, Electrical, Electronic and etc), HNDA, HNDIT, HNDM, HNDQS (Accounting) ,HND in English) என்பது SLIATE என சுருக்கமாக அழைக்கப்படும். இலங்கை தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தால் நீர் வழங்கள், நகரத் திட்டமிடல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் கீழ் பயிற்றுவிக்கப்பட்ட பொறியியலாளர்களை உருவாக்க இவ்வாறான உயர் தொழில்நுட்ப கல்வி வழங்கும் அமைப்புகளும் இலங்கையில் இளைஞர் வாழ்வில் எழுச்சிக்காக அமைக்கப்பட்டது. கல்வி முறையில் வாழ்க்கை திறன்களை வளர்க்கும் பயிற்சிகள் மற்றும் தொழில் முறை கற்றல் முதன்மை இடத்தை பெறுகின்றன. இதன் மூலம் இளைஞர்கள் தொழில்நுட்பத் திறன்களுடன் கூடிய வேலை வாய்ப்புகளை பெறுகின்றனர்.

இவ்வகை கல்வி மாற்றம் அனைத்து மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கல்வித் தொழிற் பயிற்சியை வலியுறுத்துகின்றது. இந்த அணுகுமுறை நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்க கூடிய திறமையான தொழிலாளர் படையை உருவாக்குவதை நோக்காக கொண்டுள்ளது. தொழில்நுட்பக் கல்லூரிகள் (TECHNICAL COLLEGE), தேசிய பயலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA), இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் (SLGTTI), இலங்கையின் தொழில்பயிற்சி அதிகார சபை (VTA), தச்சு, பிளம்பிங் மற்றும் டிஜிட்டல் வடிவமைப்பு போன்ற துறைகளில் நடைமுறை திறன்களை வளர்த்துக் கொள்ள, தனியார் பயிற்சி நிறுவனங்களால் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவர்கள் பாரம்பரிய பல்கலைக்கழகப் பாதையை பின்பற்றாவிட்டாலும் வேலைவாய்ப்பிற்கு தயாராக இருப்பதை உறுதி செய்கிறார்கள். இந்தத் திறன்கள் இடைநிலை பள்ளி பாடத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு, கல்வி மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் ஆகிய இரண்டையும் மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு வழங்குகிறது. இலங்கை மாணவர்கள் சமூகத்தில் தங்களின் பங்கு குறித்து அதிக விழிப்புணர்வுடன் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாடத்திட்டத்தில் தனிப்பட்ட மேம்பாடு, நெறிமுறைகள் மற்றும் சமூகப் பொறுப்பு பற்றிய பாடங்கள் உள்ளன. ஒரு தொழில் முனைவோர் மனநிலையை ஊக்குவிக்க, இக்கால கல்வி வாழ்வியல் படைப்பாற்றல், புதுமை மற்றும் ஆபத்துக்களை கையாளும் திறன் ஆகியவற்றை வளர்க்கும் திட்டங்களை ஊக்குவிக்கின்றது. வணிகத் திட்டமிடல், தலைமைத்துவம் மற்றும் நிதி மேலாண்மை போன்ற திறன்களை வளர்க்கும் வணிக உருவகப்படுத்தல்கள் மற்றும் தொடக்கத் திட்டங்கள் உள்ளிட்ட தொழில் முனைவோர் செயற்பாடுகளுக்கு இளம் சமுதாயத்தவர்கள் வெளிப்படுகிறார்கள். இது பாரம்பரிய வேலை வாய்ப்புகளை மட்டும் நம்பாமல், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய இளைஞர்களின் தலைமுறையை உருவாக்கும் குறிக்கோளுடன் ஒத்துப் போகிறது.

நிலையான வளர்ச்சி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் குடியுரிமை ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. மாணவர்கள் தங்கள் சமூகங்களுக்கு சாதகமான பங்களிப்பினை வழங்கும் பொறுப்புள்ள பெரியவர்களாக வளர்வதை உறுதி செய்கிறது. தலைமைத்துவம் மற்றும் குழுப் பணியை ஊக்குவிக்கும் சமூக சேவை திட்டங்கள் மற்றும் சாராத செயல்பாடுகளின் அறிமுகம் இந்த இலக்கை மேலும் ஆதரிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் வெற்றி பெறுவதற்கு தேவையான திறன்கள், அறிவு மற்றும் மனநிலையுடன் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு அறிவூட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னோக்கு முன் முயற்சி ஆகும். டிஜிட்டல் கல்வி அறிவு, விமர்சன சிந்தனை, நீராவிக் கல்வி, தொழில் பயிற்சி, தனிப்பட்ட பொறுப்பு, மனநலம் மற்றும் உலகளாவிய போட்டித்திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் நாட்டை வளமான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்ல தயாராக உள்ள சீரான, பல்துறை மற்றும் புதுமையான தலைமுறையை உருவாக்க இக்கால கல்வி முறை வாழ்வியல் சீர்திருத்தம் முயல்கிறது. இதுவே நம் நாட்டின் இக்கால கல்விமுறை மாற்றங்களாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே எதிர்கால வாழ்வும் பயணிக்கின்றது.

மேரி ரஜனட் நோபட் சேவியர்
மனையாவெளி



சிரிப்பு ஆரோக்கியத்திற்கு உதவும் – சிரிப்பு, நம் மூளையில் ஆன்டார்ஃபின்களை (endorphins) விடுவிக்கும், இது நம் மனநிலையை மேம்படுத்த உதவுகிறது.

கறுப்பின காந்தி என்ற அடைமொழிக்கு சொந்தக் காரன்
- "நெல்சன் மண்டேலா"

# 12 தமிழர் இலக்கும் நடை போட வேண்டிய பாதையும்

"இனவாதம் பேசுதல் தவறு, அதனிலும் பெரிய தவறு பேரினவாதம் அரங்கேற்றிய இனவழிப்பு" உரிமைகள் பறிக்கப்படுகையில் உரத்து நின்ற குரல்கள் ஒடுக்கப்பட்டமையும், சிதைக்கப்பட்டமையும் தலைமுறை தாண்டியும் உணர்வு ரீதியாக கடத்தப்பட வேண்டிய உன்னத காவியம். கந்தகக் குண்டுகள் வாரி இறைக்கப்படுகையில் குண்டுகளால் சிதைந்து பறந்த எம்மவரின் ஊன் உடலும் உதிரங்களும் நம் மண்ணை சுத்திகரித்ததாலோ என்னமோ இத்தனையும் நடந்தபின்னும் ஈழமண் இன்னும் மலடாகாமல் அள்ளி அள்ளி செல்வம் தரும் நெற்பயிர்களும் பனங்காடுகளும் நிறைந்து பூத்து நிற்கின்றது. நம் மண்ணைப் போலவே நாமும் இத்தனை இழப்புகளின் பின்னும் முழுமையாக இல்லாவிட்டாலும் முக்காற் பங்கிற்காவது அனைத்து துறைகளிலும் தடம் பதித்து நிற்கின்றோம்.



வரலாறு என்பது "நிகழ்காலத்திற்கும் கடந்த காலத்திற்கும் இடையிலான உரையாடல்" என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. ஆனால் ஆழமான தேடுதலின் பின் வரலாறு என்பது "எதிர்காலத்தை திடமாக கட்டி எழுப்புவதற்காக நிகழ்காலமானது இறந்த காலத்துடன் நடத்தும் உரையாடல் அல்லது அனுபவப் பகிர்வு" எனலாம். வரலாற்றின் அத்திவாரம் ஆதாரங்களே. தமிழர் என் வரலாறு என் கண் முன் திரிபுபடுத்தப்பட்டு அழிக்கப்படும் காலகட்டம் இது. கந்தளாய்க்குளம் கட்டிவித்த பெருமை குளக்கோட்டன் என்னும் தமிழ் மன்னனுக்குரியது என்று தெரிந்தும் பாடசாலைகளில் கந்தளாய் குளம் கட்டுவித்தது அக்போ மன்னன் என கற்பிக்கப்படுவதை நம்மால் மாற்றவோ/ தடுக்கவோ குறைக்கவோ முடியவில்லை. நம் இனத்தின் வீரதீர செயல்களுக்கும் புண்ணிய தியாகத்திற்குமான ஆதாரங்கள் பேரினவாதத்தால் அழிக்கப்படுவதும் திரிபுபடுத்தப்படுவதும் இன்று வரை நடந்து கொண்டு இருப்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

உரிமைக்கான போராட்டம் முடிந்து அடுத்த இளம் சமூகத்திற்கான தலைமுறையில் நாம் கால் தடம் பதித்த இந்தக் காலப்பகுதியில் நம் உதிரப்போரின் எச்சங்களும் ஆதாரங்களும் நம் மூத்த தலைமுறை குடிகளே!. இந்த தலைமுறை ஆதாரங்கள் மறைய முன் நம் போர் வரலாறு சரியான முறையில் ஆதாரப்பூர்வமாக எழுதப்பட வேண்டியது கட்டாயமாகும். ஓரிரண்டு புத்தகங்கள் இது தொடர்பாக வெளியிடப்பட்டிருந்தாலும், அவை முழுமையாக போர் தொடர்பாகவும், இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாகவும் ஆதாரப்பூர்வமாக விளக்கவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். எனவே நம் வரலாறு முழுமையாக சokட்ட ரீதியாக ஆவணமாக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். இல்லையேல் இதன் பாரதூர விளைவு எதுவரை செல்லும் என்றால் இலங்கை அரசின் அதிமேதகு படைத்தளபதி உட்பட பல அரசியல் தலைவர்களும் போர்க்களத்தில் நின்று சண்டையிட்டு தமிழரின் உரிமை மீட்பு போர் தோற்கடிக்கப்பட்டதாக நம் இளம் தலைமுறையினரின் பாடநூலில் கூட அச்சிடப்பட்டு கற்பிக்கப்படும் அளவு செல்வதில்

ஆச்சரியம் இல்லை.

தமிழர் இலக்கும் நடை போட வேண்டிய பாதையும் எனும் தலைப்பை நோக்குகையில் இந்த போர் எங்கே தொடங்கியது? எதற்காக இத்தனை உயிர் தியாகங்கள்? வீட்டிற்கு ஒரு பிள்ளை என வாரிக் கொடுத்தது எந்த உரிமையை மீட்க என வரலாற்றின் சுவடுகளை தேடுகையில், ஆரம்ப காலகட்டத்தில் தமிழர்களின் பல உரிமைகள் மறுக்கப்பட்டாலும் அமைதியாயிருந்த நம்மவர்கள் கல்விக்கான உரிமை மறுக்கப்படுகையிலேயே முதல்முறை வீறு கொண்டு எழுந்தனர். பல்கலைக்கழக அனுமதி தொடர்பான தமிழருக்கு எதிரான மறுப்பில், யார் எதை சொன்னாலும் நம் தலைமை சுட்டு வீழ்த்தப்பட்டதாக சொன்னாலும், போர் தோல்வியில் முடிந்ததாக சிங்கள பேரினவாதம் மார் தட்டிக்கொண்டாலும் நம் வீர தியாகங்கள் இன்று நாம் இந்த அளவு சுதந்திரமாக நடமாட நம் உரிமைகள் மீட்டு தந்தது என்பது மறுக்க முடியாததே.



கல்வி கற்றலுக்கான உரிமை மீறல்கள் முறியடிக்கப்பட்டாலும் நம்மவர்களின் கல்வி வளர்ச்சி சமகாலத்தில் குறிப்பிட்ட அளவு முன்னேற்ற பாதையில் இருப்பதாக தெரியவில்லை. எனவே என்னை பொறுத்தவரை நம் உரிமைக்கான பயணம் இன்றளவும் முடியவில்லை. எம் உதிரங்கள் உரமாகிய வரலாறை பயமின்றி சத்தமாக உச்சரிக்கும் உதடுகள் வலிமை பெற வேண்டும். காலம் மாறிவிட்டது; கையில் ஏந்த வேண்டிய ஆயுதமும் மாறிவிட்டது.

கல்வி எம் ஆயுதமாக வீட்டிற்கு ஒரு வீரர் வேண்டாம் வீட்டில் உள்ள அனைவரும் வீரராக என் இளம் சமுதாயத்தின் குறுகிய இலக்கோ ஒரு பட்டதாரி மகுடமாக நம் உயர் இலட்சியமோ உலக நாடுகள் நம் குரல் செவி சாய்க்கும் வரை கல்வியால் வளர வேண்டும். பேரினவாதம் ஒடுக்கும் முறை இவற்றையெல்லாம் வைத்து கொஞ்சமாக அரசியல் செய்யும் இன அரசியல்வாதிகளின் பிடிவிட்டு நீங்கி கல்வி வழியில் நடக்கலாம். கரம்பிடித்து செல்ல பல்கலைக்கழக பட்டதாரிகள் தலைவர்களாகலாம். கிடைக்கும் வாய்ப்பிலெல்லாம் நாமும் கல்விக்கு உதவும் மூத்த சமூகமாகலாம்.கதறி கதறி வீதியோரம் ஆயிரக்கணக்கில் நாட்களைக் கடக்கும் எம் வீரர்களை வெற்றி திலகமிட்டு கண்ணீர் நிறையா கண்களுடன் போருக்கு அனுப்பிய தாய்களுக்கு நாமும் குழந்தைகள் அல்லவா! அவர்களுக்காக எம்மால் பெரிதாக எதை செய்து விட முடியும்? குறைந்தபட்சம் அரச அலுவலகங்களில் அலைக்கழிக்கப்படும் அவர்களுக்கு ஆதரவாக பேசுமளவிற்காவது ஒவ்வொரு அலுவலகங்களிலும் நம்மவர்கள் பதவி பெற வேண்டாமா?

கல்வி ஒன்றே எம் பாதை. எம் இளம் தலைமுறைக்கு வழிகாட்டும் தலைவர்கள் நாமே. விழிப்புணர்வற்றிருக்கும் எம் தமிழ் சமூகம் காண்கையில் மனம் பதறுகிறது. மது, சூது, மாது இவற்றில் ஒன்றுக்கு கூட அனுமதி இல்லாத உன்னத இராணுவமல்லவா எம்முடையது. அதன் வழிவந்த இளம் சமுதாயம் மது போதை பாவனைக்கு அடிமையாவதை எண்ணிப் பார்க்கவே வேதனையாக உள்ளது. வெறுமனே சமூக வலைத்தளங்களில் "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என பதிவுகளை போட்டுவிட்டு பேரினவாதம் மீது மட்டும் முழுப்பழியையும் போடும் நாமும் குற்றவாளி கூண்டுகளில் நிறுத்தப்பட

வேண்டியவர்களே!. நம் இலக்கு உலக அரங்குகளில் எம் பேச்சை கேட்க கூடியிருக்கும் பல இலட்சம் செவிகளாக நம் பேச்சு நம் இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளாக.. நம் பாதை கல்வியாக நடை போடுவோம்.

அடுத்து நம் முக்கிய அடிகல்களில் ஒன்று மொழி அறிவு. இப்போது கூட வேற்று மொழி கற்க முனைகையில் தாய்மொழி பற்றுதல் இல்லையா எனும் கேள்வி கேட்கப்படுவதை பார்த்திருக்கின்றேன். என்னைப் பொறுத்தவரை இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு தமிழனுக்கும் முன்மொழி அறிவு முதன்மையானது. வினாடிப்பு உரிமை கோரல் போரின் ஆரம்பத்திலேயே சரியான முறையில் எம் தேவைகளையும் உரிமைகளையும்
கேட்டுப்பெறும் மொழி அறிவு நம்மிடம் இருந்திருந்தால் இத்தனை உயிரிழப்புகளை தவிர்த்தோ / அரைவாசியாக குறைத்தோ இருந்திருக்கலாம். ஒரே நாட்டில் வாழும் நம்மிடையே சரியான கருத்து பரிமாற்றம் பல முரண்பாடுகளை நிச்சயம் குறைக்கும். இவ்விடத்தில் உங்களுக்கு "ஏன் சிங்கள மக்களும் தமிழ் மொழி கற்கலாமே?" என்னும் கேள்வி எழலாம். அதைப் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. நமக்கு மும்மொழி அறிவு வேண்டும். அதற்கான அவசியத்தை உணர்ந்து ஆர்வத்துடன் மொழிகளை கற்க வேண்டும்.

அரசியல் என்பது சாக்கடையாகவும் அதில் இறங்குபவர்கள் சுத்தமானவர்களாகவே இருந்தாலும் இறங்கிய பின் கறைபடிந்தவர்களாகி விடுவதாகவும் நம் சமூகத்தினரிடம் இன்று வரை ஒரு ஆழமான கருத்து உள்ளது. உண்மையில் அரசியல் என்பது ஆழ்கடல். அதனுள் தகுதியானவர்கள் அனுமதிக்கப்பட்டால் முத்துக்களை பெற முடியும். இறங்கியவர் மட்டுமல்ல அவரை சார்ந்த சமூகமும் அது தொடர்பான அனுகூலங்களை அனுபவிக்க முடியும். அதேசமயம் தகுதியற்றவர்கள் சமூகத்தால் தேர்வு செய்யப்படுகையில் அவர்களால் அரசியல் எனும் ஆழ்கடலினுள் செல்ல முடியாது. வெறுமனே மேற்பரப்பில் தத்தளித்து நீரை கலங்கடித்து நுரைகளை மட்டுமே அள்ள முடியும். அனுபவிக்க முடியாத, தொட்டதும் உடையும் நுரைகளைப் போலவே அவர்களால் மீட்கப்படும் உரிமைகளும் அவர் சார்ந்த சமூகத்திற்கு கானலாகிப்போகும். ஆகவே சரியான கல்வி கற்ற இளம் சமுதாயம் அரசியலில் அனுமதிக்கப்பட வேண்டும். மக்களால் ஆதரிக்கப்பட வேண்டியது தம் இனத்தின் உயிர் வலியை உலகம் அறியச் செய்வதில் பெரும்பான்மை பங்கு வகிக்கும் ஒன்றாகும்.

மீண்டும் வலியுறுத்திச் சொல்கின்றேன். எவ் விதத்திலும் மாவீரர் போர் தோற்கவில்லை. எம்மவர்களின் உயிர் தியாகங்கள் மண்ணுடன் மக்கிப்போகவில்லை. உதிரத்தில் உரமாகி அவை எமக்கு உரிமைகளை மீட்டு தந்துள்ளது. பேரினவாதம் முன் சரிசமம் நின்று பேசுமளவு மறம் பெற்றதே நம் விடுதலைப் போர் பெற்றுக்கொண்ட வெற்றியாகும்.

மே - 18 பாற்சோறும் சம்பலும் பரிமாறி வெற்றியை ஆர்ப்பரித்த இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பெருங்குடி மக்கள் ஒரு தசாப்தம் கடந்து ஓரிரு ஆண்டுகளிலேயே சோற்றிற்கு வழி இன்றி வீதிகளில் வரிசையில் நாட்களைக் கடக்கும் போதே அறிந்திருப்பார்கள். உயிர் பயத்துடன் கஞ்சிக்காக கொட்டாங்குச்சிகளை சுமந்து வரிசையில் நின்ற பிஞ்சு குழந்தைகளின் வலியை.

ஏதும் வேண்டாம் என்று அரச மரத்தடியில் அமர்ந்த புத்தன் அவன் கொள்கைகள் படிக்கையில் வியப்படையாமல் இருக்கவே முடியாது. அத்தனை அன்பான மார்க்கம் பௌத்தம் என்று. ஆனால் ஏதும் வேண்டாம் என்று அரச மரத்தடியில் அமர்ந்த பாவத்திற்காக காணும் அரச மரத்தடியில் எல்லாம் அவரை அமர்த்தி அழகு பார்ப்பதாக அவன் நிம்மதி இழக்க செய்யும் அந்த சமூகத்தை திருத்த முற்படுவது நம் முட்டாள் தனம் அல்லவா?

நான் மீண்டும் ஒருமுறை சலிப்பின்றி சொல்கின்றேன். "இனவாதம் பேசுதல் தவறு ஆனால் பேரினவாதம் அரங்கேற்றிய அடக்குமுறையும் இனவழிப்பும் மறக்க முடியாத மாறா வடுவாய் எம் இளம் தலைமுறைக்கு கடத்த வேண்டிய இனத்தின் உயிர் வலியாகும்". என் உரிமைக்கான போர் இன்றளவும் முடியவில்லை. மாவீரர்கள் சிந்திய குருதியும் அவர்கள் செய்த உயிர் தியாகமும் நம் போரின் முதற்கட்ட அஸ்திவாரமே ஆகும். திடமாக அமைக்கப்பட்ட அத்திவாரத்தில் கட்டிடம் எழுப்பும் பெரும் கடமை நம்முடையதாகும். கல்வியை ஆயுதமாக்கி, முன்னோக்கி நகர்வோம். சர்வதேச மேடைகள் வரை நாம் கல்விப் பயணம் தொடரட்டும். நம்மவர்களின் உரிமை மீட்பு போரிற்கான நியாயம் பெறும் வரை நம் போர் தொடரட்டும்.


சதுர்த்திகா உதயகுமார்
செல்வநாயகபுரம்




காலச் சக்கரத்தின் சுழந்சியில் ஒடுக்கப்பட்ட
இனத்தின் மூல வேர்கள் வெகு ஆழத்தில்
புதைக்கப்படுவதை விசாலிக்கும்
விருட்சங்கள் உணராதிருத்தலே நியதி!!

# 13 இளைஞர்களின் வாக்குரிமை: ஜனநாயகத்தில் மாற்றத்தை உருவாக்கும் சக்தி

இளைஞர்களின் வாக்குரிமை என்பது ஜனநாயகத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமான நிலையாக விளங்குகிறது. இன்றைய உலகில், இளைஞர்கள் சமூகம், பொருளாதார மற்றும் அரசியலின் பல துறைகளில் முக்கிய பங்காளிகளாக உள்ளனர். அவர்களின் வாக்குரிமை, சமூக மற்றும் அரசியல் மாற்றங்களை கட்டமைக்கும் திறனை கொண்டது. இது ஒரு உரிமையாக மட்டுமில்லாமல் மாற்றத்தை உருவாக்கும் சக்தியாகவும் காணப்படுகின்றது. இளைஞர்களின் எண்ணங்கள், அவர்கள் கொண்டுள்ள புதிய கருத்துக்கள் மற்றும் பார்வைகள் ஒரு சமூகத்தின் வளர்ச்சியை தூண்டுகிறது. இவர்கள் நாட்டின் எதிர்காலம் என்பதை கருத்தில் கொண்டு அவர்களின் கருத்துக்களை அரசியல் செயற்பாடுகளில் இணைத்துக் கொள்வது மிக முக்கியம்.

வாக்குரிமை என்பது தனிநபரின் கருத்துக்களை வெளிப்படுத்தும் முக்கியமான சந்தர்ப்பமாகும். குறிப்பாக இளைஞர்களின் வாக்குரிமை ஜனநாயகத்தின் சீர்திருத்தங்களை தூண்டும் ஒரு முக்கிய சக்தியாகும். இவர்கள் தங்கள் குரல் மூலம் அரசியல் சமூக மாற்றங்களை நிகழ்த்தி வருகின்றார்கள். இன்றைய சமூகத்தில், இளைஞர்கள் தங்கள் சிந்தனைகளை எண்ணங்களை மிகவும் தைரியமாக வெளிப்படுத்துவதுடன், நாட்டு மக்கள் அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களை கோருகின்றனர். இளைஞர்களின் வாக்குரிமையை பயன்படுத்துவதன் மூலம் அரசியல் தலைவர்கள், மக்களின் உண்மையான தேவைகளை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிவகுக்கிறது.

இன்றைய உலகின் பல நாடுகளில் இளைஞர்கள் அரசியலுக்குள் அதிகம் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி, கனடா போன்ற நாடுகளில் இளைஞர்கள் அரசியல் செயலில் அதிகம் ஈடுபடுவதுடன், அவர்களின் வாக்குரிமை மூலம் நாடு முழுவதும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். சமீபத்தில் நடந்த அமெரிக்க தேர்தலில் இளைஞர்கள் பெரும் அளவில் வாக்குப்பதிவு செய்ததன் மூலம், நாட்டின் அரசியல் அமைப்பில் பெரும் மாற்றங்கள் நிகழ்தன. குறிப்பாக, அவர்களின் கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய தலைவர்கள் வெற்றி பெற்றதை பார்த்து, இளைஞர்களின் வாக்குரிமை அரசியல் மாற்றத்தை உருவாக்கும் மிகப்பெரிய சக்தியாக இருக்கும் என்பது உறுதியாக நம்புகின்றனர்.

இதே போல, பிரிட்டனில் 2016 ஆம் ஆண்டு நடந்த பிரெக்சிட் வாக்கெடுப்பில் இளைஞர்கள் அதிகம் பங்கேற்காதது, ஒரு பாரிய ஜனநாயக இழப்பாக பலரும் தெரிவித்தனர். அது இளைஞர்களின் வாக்குரிமையின் முக்கியத்துவத்தை புலப்படுத்துகிறது. இதேபோன்று இலங்கையில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இளைஞர்கள் வாக்கு செலுத்துவதில் அதிக உற்சாகம் காட்டியதால், அரசியல் அமைப்பின் புதிய மாற்றங்களை உருவாக்கும் வழிவகை பிறந்தது. இவை இளைஞர்களின் வாக்குரிமை சீர்திருத்தங்களுக்கும் அரசியல் மாற்றங்களுக்கும் எவ்வளவு முக்கியமானது என்பதை தெளிவாக காட்டுகிறது. இளைஞர்கள் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்தியதன் மூலம் ஜனநாயகத்தின் ஆழமும், சமுதாயத்தில் ஒற்றுமையும் வளர்த்தெடுக்கப்படுகிறது. இளைஞர்களின் வாக்குரிமை என்பது அவர்களுக்கு மட்டுமல்லாமல் நாட்டின் பொதுப்பயணிக்கும் இன்றியமையாததாக உள்ளது.

இதன் மூலம், அவர்கள் தங்களது சமூகத்தில் அரசியல் சீர்திருத்தங்களை, பொருளாதார மாற்றங்களை உருவாக்கும் ஒரே வழியாக திரள்கின்றனர். மகாத்மா காந்தியின் கருத்துப்படி, "இளைஞர்களே நாளைய நாடுகளின் எதிர்காலம்". இதன் மூலம், இளைஞர்களின் குரல், எண்ணங்கள், பார்வைகள் நாடுகளின் வளர்ச்சிக்கு எந்த அளவிற்கு பங்குபெறும் என்பதை நாம் உணர முடியும்.

தற்போதைய தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்ப வளர்ச்சியும் இளைஞர்களின் வாக்குரிமையை மிகவும் சக்தி வாய்ந்ததாக்கியுள்ளது. சமூக ஊடகங்கள், இணையதளங்கள் ஆகியவை இளைஞர்களின் குரல்களை விரைவாகக் கொண்டு செல்லும் வடிவமாக உள்ளன. குறிப்பாக, எகிப்து, சிரியா போன்ற நாடுகளில் இளைஞர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்தி அரசியல் மாற்றத்தை உருவாக்கியதை உதாரணமாக கூற முடியும். 2011ம் ஆண்டின் அரபு நாட்டின் புரட்சியின் போது, இளைஞர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்தி தங்கள் நாட்டின் அரசியல் கருத்துக்களை தைரியமாக வெளியிட்டனர். இதன் மூலம், அவர்கள் தங்கள் நாட்டின் அரசியல் அமைப்பில் பெரும் மாற்றங்களை உருவாக்கியதோடு, உலக நாடுகளுக்கே ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்தனர்.

இளைஞர்களின் வாக்குரிமை என்பது ஜனநாயகத்தின் வலிமையாகும். அவர்கள் தங்கள் கருத்துக்களை தைரியமாக வழிப்படுத்திய போது அரசியல் தலைவர்களும் அதை ஏற்று, சமூகத்தின் நலனுக்காக, நாட்டின் வளர்ச்சிக்காக தங்கள் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். இன்றைய யுகத்தில், பல இளைஞர்கள் அரசியலில் ஈடுபட்டு, தங்கள் சமூகத்திற்கு நீதி மற்றும் சமத்துவத்தை வலியுறுத்தி வருகின்றனர். இது ஒரு நாட்டின் முன்னேற்றம், சுதந்திரம், மற்றும் நலனுக்கான அடிப்படையாகும். எனவே, இளைஞர்களின் வாக்குரிமையை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்கள் சமூகத்தில் நாட்டில் உலகில் பெரிய மாற்றங்களை உருவாக்குவது இன்றியமையாதது.

செ. ரிசாந்

மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் மூன்றில் ஒரு பகுதியை கனவுகளுடன் செலவிடுகிறார்கள்.




வாழ்க்கையில் பாதி மனிதர்கள்
மகிழ்ச்சியாக இருக்கும் ஒரே இடம்
கற்பனை மட்டுமே!

நாம் ஒரு புதிய மொழியை
கற்றுக்கொள்ளும்போது, நம் மூளை புதிய
நரம்பு இணைப்புகளை உருவாக்குகிறது.

## ௧௪ புரட்டாதி மாத திருமலை செய்திகள் – ஓர் பார்வை

நாம் ஒரு முடிவை எடுக்கும் போது, நம் மூளை அதை ஏற்கனவே முடிவு செய்துவிட்டது என்று ஆய்வுகள் காட்டுகின்றன.



- 2023 O/L பரீட்சையில் திருமலை வலையத்தில் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி முதலிடம்.
- திருக்கோணமலை புகைப்படக் கலைஞர்கள் சங்கத்தின் மூன்றாவது "மெஸ்மெரிசிங்க் திருகோணமலை 2024" தேசிய புகைப்படக் கண்காட்சியும் விருது வழங்கும் நிகழ்வும் நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
- தியாக தீபம் திலிபனின் நினைவுதினம் வியாழக்கிழமை (26.09.2024) மாலை திருகோணமலை சிவன் கோவிலுக்கு முன்னால் அனுஷ்டிக்கப்பட்டது.
- கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகர வியாழக்கிழமை (26.09.2024) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.









15

# பயிரிடல் கோட்பாடு



பயிரிடல் கோட்பாடு என்பது ஊடகம் சார்ந்த அல்லது ஊடகமயமாக்கப்பட்ட சூழலில் மனிதனது சிந்தனைகள், செயற்பாடுகள் உணர்ச்சிகள் என்பவற்றை வெகுசன ஊடகங்களின் செல்வாக்கு எவ்வாறு கட்டமைக்கின்றது. அதாவது, அவ் மனிதனின் அம் மனிதனின் சிறுபராயம் முதல் அவன் வளரும் வரை அவனது உடல் உள்ளம் சார்ந்த நடத்தைகளில் எவ்வாறு ஊடகங்களின் செல்வாக்கு பங்களிப்பு செய்கிறது என்பதை ஒரு பயிர் வளரக்கூடிய சூழலுக்கு ஒத்ததாக ஒப்பிட்டுக் கூறுவதாக பயிரிடல் கோட்பாடு விளங்குகிறது. கோட்பாட்டை ஜோர்ஜ் செப்னர் முன்வைத்தார்.

தெளிவாக கூறுவதாயின், பயிரிடல் கோட்பாடு என்பது எவ்வாறு ஒரு விவசாயி எவ்வாறு ஒரு விதையை நட்டு அதனை வளரச் செய்து குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக அதனை அறுவடை செய்ய தயாராகிறாரோ அதைப்போலவே ஊடகங்களும் தமது நோக்கத்தை அல்லது பயனை அடைவதற்காக தமது கருத்தியல் என்ற விதைகளை மக்களின் மனங்களில் நடுகை செய்து அவர்களை தம் கருத்தியலின்பால் செயற்பட வைக்கின்றமையை பயிரிடல் கோட்பாடு என்பர்.






மனிதர்கள் பிரசன்னமாகியிருக்கும் நினைவுகளை மறந்துவிடுவார்கள் – சில எதிர்மறை நிகழ்வுகளை மறந்துவிட நமது மூளை உதவும், இது நம் நலத்துக்காக ஒரு பாதுகாப்பு உபகரணம் ஆகும்.

நிரோஜினி ஞானோதயம்



# தளத்தின் தடம்






"தளம்" அமைப்பினால் இளையோருக்கான Google Tools தொடர்பான தெளிவை ஏற்படுத்தும் நோக்குடனும், அவற்றை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவதன் ஊடாக தங்களுடைய வேலைகளை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதை ஊக்குவிக்கும் முகமாகவும், Bootcamp G பயிற்சி ஞாயிற்றுக்கிழமை (01.09.2024) ஆரம்பித்து வைக்கப்பட்டது.






இளையோரின் தனியார் துறை வேலைவாய்ப்பு தொடர்பான கருத்துக்களையும், அவர்களுக்கு தனியார் துறை வேலை வாய்ப்புகளை இலகுவில் பெற்றுக் கொடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் செவ்வாய்க்கிழமை (17.09.2024) தளம் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.






17.09.2024 செவ்வாய்க்கிழமை Planetary Health பல்கலைக்கழக கற்கைநெறியின் அறிமுக நிகழ்வு தளம் அலுவலகத்தில் இடம்பெற ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது.



நாம் ஒரு நல்ல நட்பை
பராமரிப்பது நம்
மனநலத்திற்கு
மிகவும்
முக்கியமானது.

# அடுத்த மாத திட்டங்கள்

1. சுயதொழிலை மேற்கொள்ள விரும்புவோர் எவ்வாறான வழிமுறைகளை பின்பற்றி அதற்கான முதலீடுகளை பெற்றுக்கொள்ளலாம் என இளம் சமூகத்தினருக்கு வழிகாட்டும் வகையிலான வழிகாட்டல் அமர்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2. இளம் சமூகத்தினரின் எதிர்கால வேலை வாய்ப்பிற்கு அவசியமான EXCLE தொடர்பான அறிவினை வழங்க 05 நாள் கொண்ட வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

3. சிங்கள மொழி அறிவை தமிழ் சமூகத்திடம் விருத்தி செய்யும் பொருட்டு 06 மாத கால சிங்கள வகுப்புக்கள் திட்டமிட்டதன் படி இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

4. பல்கலைக்கழகத்தை தவற விட்டவர்கள் University College இல் கற்கையை தொடர அவர்களுக்கான வழிகாட்டல் அமர்வு இணையவழி கலந்துரையாடலாக இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

5. "குருதி கொடையளித்து உயிர் காப்போம்" என்ற அடிப்படையில் இரத்ததான முகாம் நடத்தப்பட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

6. நேரடி அமர்வுகளில் கலந்து கொள்ள இயலாத சமூகத்தவரை கருத்திற் கொண்டு நிகழ்நிலை அமர்வுகள் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# அடுத்த மாத இதழுக்கான தலைப்பு

"இலங்கையின் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ் இளையோரின் பங்கு"

உங்கள் ஆக்கங்களை இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி -
தளம் அமைப்பு,
முதலாம் மாடி,
நகராட்சி மன்ற கட்டிடத் தொகுதி,
கடற்படைதள வீதி,
திருக்கோணமலை.




தளத்தின் விருட்சம் - மாத இதழ்

# விருட்சம்

## இதழாசிரியர் குழாம் விபரம்



நவநீதன் பிரதீஷன்

தனிஸ்டன்
வடிவமைப்பாளர்





சத்தியநாதன் ஹரிபிரவின்

நவநீதன் பிரநீதன்





மகாலிங்கம் டிலானி

**எமது மண்ணுக்காய் தளத்தின் குரல்**
**எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்!**